## பல்லேபொல பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 27 திகதி சபையின் நகர பிதாவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையில் 1.3.3, 1.3.4, மற்றும் 1.3.6 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ளமுடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மைகள்

----------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு கொள்கைகள்

-------------------------------------

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) கட்டட அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 3,646,467 மற்றும் ரூபா 46,116 இற்கான அலுவலக உபகரணங்களின் பெறுமதியை மூலதனப் படுத்தி இருக்கவில்லை. அத்துடன் ஹபுகஸ்யாயலங்த வத்த என்ற காணியில் 27.9 பர்சஸ் காணிப்பகுதியின் பெறுமதி மதிப்பீடு மேற்கொண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமாக கப் வண்டி ஒன்றின் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,440,000 மூலதனச் செலவினை மோட்டார் வாகனம் மற்றும் மாட்டு வண்டிக் கணக்கிற்கு சீராக்கல் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்வரும் ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 45,636 இற்கான வருமானம், வருமான முற்பெறுவனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 1,882,394 இற்கான நீர் கட்டண மதிப்பீட்டு வருமானத்தையும் பொது வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் கணக்கின் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி இடையே ரூபா 38,032 இற்கான வித்தியாசம் ஒன்று காணக் கூடியதாக இருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசு பாய்ச்சல் கூற்று மற்றும் தேறிய சொத்துக்கள் வேறுபடுதல் மீதான கூற்று ஒன்று சமர்பித்திருக்கவில்லை.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

-------------------------------------------------------------------------------

கூட்டுத்தொகை ரூபா 29,983,481 இற்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளிடையே ரூபா 18,073,820 சமனற்ற தன்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

------------------------------------------

மீளாய்வாண்டு இறுதிய திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 379,404 ஆகக் காணப்பட்டதுடன் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 103,505 இற்கான மீதி ஒன்றும் அதில் அடங்குகின்றது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

மீளாய்வண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 23,269,674 ஆகக் காணப்பட்டதுடன் 02 வருடங்கள் மற்றும் 05 வருடங்கள் இடைபட்ட காலத்தை சேர்ந்த ரூபா 1,275,753 இற்கான மீதி மற்றும் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 38,150 இற்கான மீதியும் இதில் அடங்கியிருந்தன.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 29,659,974 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.7 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் மற்றும் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) பிரிவு 126 (ஏ) | துணை விதிகள் ஆக்கப்படாமல் வாகன தரிப்பிடங்களில் இருந்து ரூபா 46,500 வருமானம் ஒன்று உழைக்கப்பட்டுள்ளது. |
| (ii) பிரிவுகள் 126 (எனை) (ஊ) 126 (ஓஓஓ) மற்றும் மாகாண சபை அமைச்சரின் செயலானரின் இலக்கம் சீஎல்∴10சீ∴01∴11 கொண்ட 2011 ஜுன் 13 திகதியில் கடிதம் | அதிகார பிரதேசத்தில் காட்சிப்படுத்தியிருந்த விசாலமான அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கட்டணங்கள் அறவிட்டிருக்கவில்லை. |
| (iii) பிரிவு 132 (ஒ) மற்றும் (ஔ) | அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றிருக்காமல் ரூபா 55,000 இற்கான செலவினை மேற் கொள்ளப்பட்டிருந்தது. அத்துடன் தலைவரின் தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 33,131 இற்கான 205 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |
| (M) இலங்கை சனநாயக சோசலிய குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 104(1) | சபைக்குச் சொந்தமான கப் வண்டி தீயினால் எரிக்கப்பட்டது தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 571 மற்றும் 572 | 2 வருட காலத்தை கடந்துள்ள ரூபா 447,575 இற்கான 12 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,981,960 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,542,074 ஆகும்.

2.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

--------------------------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் ரூபா 1,510,329 இற்காக மீதி மற்றும் ரூபா 1,548,361 இற்கான தொழிற்பாடு மூலதன மீதி மறை பெறுமதி ஒன்றினை காட்டியது.

2.3 வருமான நிருவாகம்

----------------------------

2.3.1 வாடகை மற்றும் நீர்க் கட்டணம்

-----------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 59,570 இற்கான வாடகை மீதி மற்றும் ரூபா 1,321,232 இற்கான நீர்க் கட்டணம் ஆகிய வருமானங்கள் அறவிடப்பட வேண்டியிருந்தன.

2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

--------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 198,854 இற்கான தொகை ஒன்றும் மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 4,259,267 இற்காக தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 79,501 பெறுமதியான 15 பொருட் பதிவேட்டு பண்டங்கள் பற்றாக்குறை ஒன்று காணப்பட்ட போதும், அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான கப் வண்டியின் நாளாந்த ஒட்டக் குறிப்புகளில் வாகனத்தை பயன்படுத்தும் அலுவலர்களினால் ஓடிய தூரத்தின் எண்ணிக்கை தனது கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான கட்டடம் ஒன்று கட்டணம் ஏதும் அறவிடப்படாமல் முன்பள்ளி ஒன்று நடத்துவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சபைக்கு சொந்தமான வேறு ஒரு காணியில் கட்டடம் ஒன்று நிர்மாணப்பதற்காக பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படாமல் வெளிசாரால் இருவருக்கு வசதி ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

3.2 பயன்படுத்தப்படாத / குறை பயன்பாட்டு சொத்துக்கள்

---

ரூபா 957,400 பெறுமதியான 04 சொத்து அலகுகள் மற்றும் பெறுமதி கணக்கிடப்படாத சொத்து அலகு ஒன்றும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மை மற்றும் நல்லாட்சி

---

4.1 அகக் கணக்காய்வு

---

1988 (நிதி மற்றும் நிருவாக) விதி கோவையின் விதி 5(7) பிரகாரம் அகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

முறையான அங்கீகாரம் பெறாமல் இரண்டு செலவு விடயங்களில் மதிப்பீட்டு ஏற்பாட்டு வரையரையினை மிகைத்து முறையே நூற்றிற்கு 142 மற்றும் நூற்றிற்கு 768 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 10 செலவு விடயங்களில் மதிப்பீடு செய்திருந்த ரூபா 682,750 இற்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டுள்ளன. 15 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளவை நூற்றிற்கு 12 முதல் நூற்றிற்கு 99 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 07 வருமான விடயங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமான சேகரிப்பின் முன்னேற்றம் நூற்றிற்கு 23.5 ஆக குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இதன் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகளின் கட்டுப்பாடுகளின் பாதீடு பயன்தறு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.3 தீர்க்கப்படாதிருந்த மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

சபைக்குச் சமர்பித்திருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் 02 இந்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 207,280 ஆகும்.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலுவை வருமான அறவீடு செய்தல்

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) அகக் கணக்காய்வு

(ஊ) நிதிக் கட்டுப்பாடு